கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No.115/2024**

2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வதுரை | வயது | 59 |
| தந்தை பெயர் | ஆறுமுகம் | ஜாதி | |
| தொழில் | BSNL ஊழியர் | மதம் | |
| ஊர் | புலிவலம் | தாலுக்கா | |

( எதிரி ஆஜரில் இல்லை. எதிரி சார்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் திருவாரூர் புலிவலத்தில் வசித்து BSNL ல் வேலை பார்த்து வருகிறேன். எதிரி சுதாகரை தெரியும். கடந்த 2023 ம் வருடம் 7 வது மாதத்தில் எதிரியிடம் இருந்த இடம் வாங்குவதற்கு ரூ.7 லட்சம் கொடுத்து நானும், சுதாகரும் ஒரு அக்ரிமெண்ட் எழுதிக்கொண்டோம். நான் சுதாகரிடம் அக்ரிமெண்ட் செய்து கொண்ட இடத்தை சிங்காரவேல் என்பவர் சுதாகரிடம் இருந்து வாங்கி கொண்டார். சுதாகர் அக்ரிமெண்ட் செய்து கொண்டது போல் எனக்கு இடத்தை விற்பனை செய்யவில்லை. இதுகுறித்து நான் சுதாகரிடம் கேட்டேன். அதற்காக எதிரி சுதாகர் கடந்த 28.07.2023 ம் தேதி மதியம் நான் வீட்டிற்கு சாப்பிடுவதற்காக வந்தபோது எதிரி சுதாகர் என்னையும், எனது மனைவியையும் அரிவாளை கொண்டு வெட்ட வந்தார். எதிரி சுதாகருடன் சிங்காரவேலன் வந்தார். சுதாகர் என்னையும், என் மனைவியும் குச்சிகாரி, தேவடியா என்று தகாத வார்த்தைகளால் திட்டினார். சுதாகரும், சிங்காரவேலும் ஆட்களுடன் வந்து எனது வீட்டின் காம்பவுன்ட்டை உடைத்து வீட்டின் கீரில் ஜன்னலையும் உடைத்து விட்டார்கள். நான் வாங்கி வைத்திருந்த 30 முள் படல்களையும் சிங்காரவேலும், சுதாகரும் எரித்து விட்டார்கள். இது குறித்து நான் போலீசில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**புகார் அசா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சுதாகரும், சிங்காரவேலுடன் எத்தனை நபர்கள் வந்தார்கள் என்றால் 7,8 நபர்கள் வந்தார்கள். புகார் யாரால் எழுதப்பட்டது என்றால் என்னால் எழுதப்பட்டது. நான் எழுதிய புகாரில் காம்பவுண்ட் கீரில கேட்டை உடைத்தது குறித்தும், முள் வேலியை எரித்தது குறித்து சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் கொடுத்த புகாரில் யாருக்கு சம்பவம் தெரியும் என பெயர் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை. சுப்பிரமணியன் மகன் வேலு என்பவருக்க தெரியும். மேற்படி விவரத்தை எனது புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு நடைபெறாத காரணத்தினால் தான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் வீட்டில் இருந்து காவல் நிலையத்திற்கு 10 நிமிடத்தில் சென்று விடலாம் என்றால் சரிதான். இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்றால் 28ம் தேதியே கொடுத்து விட்டேன். எத்தனை மணிகது புகார் கொடுத்தேன் என்றால் நேரம் தெரியவில்லை. நான் கூறுவது போல அன்றையதினம் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. சுதாகரிடம் நான் கொடுத்த ரூ.7 லட்சத்தை நான் இடம் வேண்டாம் என்று கூறியதால் அவர் என்னிடம் கொடுத்து விட்டார் என்றும், எங்களுக்குள் இருந்த அக்ரிமெண்டை வைத்து அவர் என் மீது சிவில் வழக்கு தொடுத்துவிடுவார் என்று எண்ணி நான் அவர் மீது பொய்யான சங்கதிகளை கூறி நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி சுதாகர் என்னை அரிவாளை எடுத்து வெட்ட வரவில்லை என்றும், தகாத வார்த்தைகளால் திட்டவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் எவ்வித தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

S CINTHA

Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, st=TAMIL NADU, c=+91
Date: 2025.01.29 16:19:26 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
திருவாரூர்.